**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**O.S. 308/2013**

**நாள்.13.03.2025**

**வா.சா.2- கணேசன்**

**த/பெ - சங்கரலிங்கம்**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் தற்பொழுது தான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வருகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். மதுரைவீரன் என்பவர் கண்ணையா என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கு எது சம்பந்தப்பட்டது என்றால் கேணி யாருக்கு பாத்தியம் என்பது பற்றியது. தாவா கிணற்றின் மின் இணைப்பு எண்.190 ஆகும். அதற்கு முன்பு இருந்த மின் இணைப்பு எண் பற்றி எனக்கு தெரியாது. மின் இணைப்பு எண்.190 யார் யாருக்கு பாத்தியம் என்றால் ஆறுமுகம் பிள்ளை, பழனியப்பபிள்ளை, ஆண்டியாபிள்ளை ஆகியோருக்கு பாத்தியப்பட்டதாகும். கண்ணையா எனக்கு சின்ன பாட்டனின் பேரன் ஆவார். மதுரை வீரன் எனது பெரிய பாட்டனின் பேரன் ஆவார். தாவா கிணறு சர்வே எண்.1621/2F ல் உள்ளது. தாவா கிணற்றில் எனக்கு பாத்தியம் எதுவும் இல்லை. தாவா கிணற்றிற்கு எந்த மின் நிலையத்தில் இருந்து மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அய்யலூர் மின் நிலையத்தில் இருந்து முதலில் தாவா கிணற்றிற்கு மின் இணைப்பு எண்.127 கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மதுரை வீரன் பெயரிலும் மின் இணைப்பு எண்.127 கூட்டாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது உள்ள மின் இணைப்பு எண்.190 வடமதுரை மின் நிலையத்தில் இருந்து கொடுக்கப்பட்டுள்ளது. எங்கள் ஊர் அருகில் உள்ள அரசன்செட்டிபட்டியில் மின் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். அரசன்செட்டிபட்டியில் உள்ள மின் அலுவலத்தில் இருந்து தான் மின் இணைப்பு எண்.190 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அங்குள்ள டிரான்ஸ்பார்மரிலிருந்து வருகிறது. நான் கண்ணையா அழைத்ததன் பேரில் சாட்சியம்

அளிக்க வந்துள்ளேன். வழக்கு பற்றி எனக்கு தெரிந்தததை கூறியுள்ளேன். மின் இணைப்பு எண்.190ல் பிரதிவாதிகளுக்கும் பங்கு உள்ளது என்றால் இல்லை. ஆறுமுகம் பிள்ளை எனது சித்தப்பா. கண்ணையா ஆறுமுகம்பிள்ளையின் மகன் ஆவார். ஆறுமுகம்பிள்ளை கண்ணையாவிற்கு தாவா கிணறு சம்பந்தமாக ஆவணம் எழுதிக்கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியும். தாவா கிணறு, மின் இணைப்பில் பாதி பங்கை தான் ஆறுமுகம்பிள்ளை கண்ணையாவிற்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆறுமுகம்பிள்ளைக்கு பாதி பங்கு உள்ளதால் தான் அதைப்பொறுத்து மட்டும் கண்ணையாவிற்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணையை 4 முதல் 6 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.)

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R

**Principal District Munsif**
**Vedasandur**